

# பெண்குழந்தை டிரெஸ்

## சூப்பர் சிம்பிள், -ஆ, சூப்பர் க்யூட் -ஆ, ட்ரெண்டி-ஆ இருக்கிற, இந்த டிரெஸ்-ஐ, தைக்க ஆரம்பிக்கலாம்.





உங்க உலகத்தினுடைய மையமா இருக்கிற சின்ன பெண்குழந்தை இருக்கிற அதிர்ஷ்டம் உள்ளவங்கள்-லே நீங்களும் ஒருத்தரா, இருக்கீங்கன்னா, அவ உங்களுக்குக் கொடுக்கிற சந்தோஷத்தை, நீங்க உலகத்துக்கு எடுத்துச் சொல்ல நிச்சயம் விரும்புவீங்கன்னு, நாங்க உறுதியா சொல்றோம்.அன்போட உங்க குழந்தைக்கு, டிரெஸ்- பண்ணிவிடணும்-னு நினைக்கிற, எல்லாருக்கும்,- இந்த லெஸ்ஸன்- அதை பத்தி தான் சொல்லுது.இந்த வீடியோ-லே,உங்க பெண்குழந்தைக்கு டிரெஸ்- தைக்கறதைப்பத்தி,நீங்க கத்துக்கலாம்.

ட்ரெஸ்- னுடைய மாதிரி உங்களுக்குத்தேவைப்படும்.அதை, எங்களுடைய ushasew.com- வெப் சைட்-லே இருந்து, டவுன்லோட்- பண்ணிக்கலாம்.

ட்ரெஸ்- தைக்க உங்களுக்குத்தேவையானது,30- அங்குலம் நீளமிருக்கிற துணி,அதனோட அகலம் சாதாரணமா,45-லே இருந்து,50- அங்குலம் வரைக்கும் இருக்கும். அப்புறம்,சேஃப்டி பின்ஸ் அலங்காரம் பண்றதுக்கு ப்ரூச், 42- அங்குல நீளமும்,ஒரு அங்குல அகலமும் இருக்கிற ரெண்டு ரிப்பன், நூல்,மெஷரிங் டேப், மார்க்கர், , கத்தரிக்கோல்.

துணியை இப்படி நாலா மடிச்சுக்கங்க.
மாதிரியை, மடிச்சு வெச்சிருக்கிற துணி மேலே வையுங்க.
இந்த பாயிண்ட்-லே இருந்து, இந்த பாயிண்ட்- வரைக்கும்,ட்ரெஸ்-னுடைய நீளம். கீழே மார்க்- பண்ண இடத்திலே இருந்து,மாதிரியினுடைய கடைசி வரைக்கும், லோயர் ஹெம்-க்கான துணி.

















அதே மாதிரி,மேலே மார்க்- பண்ண இடத்திலே இருந்து, ஓரம் வரைக்கும் இருக்கிற இடம், மேலே, கேசிங்-க்கு வேண்டியது.

இது,அக்குள், இது பக்க ஓரம்..

ரெண்டாவது லைன்- மார்பளவு. தாராளமா இருக்கவும், ஓரம் தைக்கவும் போதுமானது.

மாதிரியை, துணி மேலே வெச்சு பீடட் பின் -களாலே,பின்- பண்ணுங்க. வீடியோ-லே காட்டியிருக்கிற மாதிரி, மார்க்கர்-ஐ, பயன்படுத்தி,மாதிரியினுடைய அவுட்லைன்-ஐ,துணி மேலே வரைஞ்சுக்கங்க.

மார்க்- பண்ண லைன்ஸ்- ஓரமா, வெட்டி எடுங்க.

பின்களை எடுத்துடுங்க.

துணியைப்பிரிச்சு, ரெண்டு துண்டுகளையும் தனியா எடுத்திடுங்க.

இப்போ நீங்க பார்க்கற மாதிரி,அக்குள் பகுதியினுடைய ஓரத்தை, கால் அங்குலத்துக்கு, ரெண்டுமுறை மடிச்சுக்கங்க. மடிப்பை பின் பண்ணிக்கங்க.

இன்னொரு பக்கத்திலேயும் இதே மாதிரி மடியுங்க.

இன்னொரு துண்டு துணியிலேயும், ரெண்டு அக்குள் ஓரத்தை, மடிச்சுக்கங்க.

இனி.மடிச்ச ஓரங்களை, தைக்க வேண்டிய நேரம் வந்தாச்சு.

பேட்டர்ன் செலெக்டர் டயல் -லே, A ஸ்டிச்-ஐ, செலக்ட்- பண்ணிக்கங்க. ஸ்டிச் லென்த் -ஐ, 2.5-க்கு, செட்- பண்ணிக்கங்க.


மடிச்ச ஓரங்களை தையுங்க.தைக்கும் போது, பின்-களை மறக்காம எடுத்திடுங்க.

இது டிரெஸ்- னுடைய, அக்குள் பகுதி.ரெண்டு துணி துண்டுகள்-லேயும் மடிச்சிருக்கிற நாலு ஓரங்களையும் தையுங்க.


அடுத்து, மேலே, கேசிங் -க்கு விட்டிருக்கிற இடத்தை, ½ அங்குலத்துக்கு மடியுங்க, மறுபடியும் 1½ அங்குலத்துக்கு, மடியுங்க. அதை, பின் பண்ணுங்க.

இதே மாதிரி இன்னொரு துண்டு துணியிலேயும் செய்யுங்க.

அடுத்து, ரெண்டு
துண்டுகள்-லேயும்,பின்-பண்ண ஓரத்திலே casing-ஐ, தையுங்க.






பேட்டர்ன் செலெக்டரை - A - லேயும், ஸ்டிச் லென்த் 2.5 - லேயும் வெச்சு ஸ்ட்ரெயிட் ஸ்டிச் -ஐ, நாம தைக்க ஆரம்பிக்கப்போறோம்.

தைக்கும் போது பின்-களை எடுக்க மறந்துடாதீங்க. அடுத்ததா, ரெண்டு துண்டுகளுடைய ஓரத்தையும் சேர்த்து தைக்கப்போறோம்.

ரெண்டு துண்டு துணிகளுடைய ரைட் சைட்ஸ்- ஒண்ணா சேர்ந்து இருக்கிற மாதிரி பார்த்துக்கணும்.மெஷின் செட்டிங்க்- அதே தான்.முதல்லே  ரிவர்ஸ் ஸ்டிச்- போட்டுட்டு, ரெண்டு துண்டுகளையும் சேர்த்து தையுங்க. மறந்துடாதீங்க, முடிக்கும் போதும், ரிவர்ஸ் ஸ்டிச் -போடணும்,

இன்னொரு பக்கத்தையும் தையுங்க. ஹெம்- பண்றதுக்காக விட்ட இடத்தை, ½ அங்குலத்துக்கு மடியுங்க, மறுபடியும் 1½ அங்குலத்துக்கு, மடியுங்க. அதை, பின் பண்ணுங்க.

இப்போ ட்ரெஸ் -னுடைய ஹெம் லைன்-ஐ, தையுங்க. தைக்கும் போது பின்-களை எடுத்திடுங்க.

ஓரங்கள் நீட்-ஆ, இருக்கறதுக்காக, நாம, சிக் சாக் ஸ்டிச்
ஐ, போடலாம். பேட்டர்ன் செலெக்டரை -ஐ, C -யிலேயும், ஸ்டிச் லென்த்
-ஐ, 1.5- லேயும் வையுங்க. டிரெஸ்- னுடைய ரெண்டு ஓரங்கள்-லேயும், சிக் சாக் ஸ்டிச் - போடுங்க. தைக்கிற வேலை முடிஞ்சது.இனி இதை, கம்ப்ளீட்- பண்ணலாம்.இங்கே மேலே மடிச்சு நாம உண்டாக்கின டன்னல் கேசிங்-க்கு உள்ளே, ரிப்பனை நுழைக்கலாம்.

வீடியோ  -லே காட்டியிருக்க மாதிரி,சே஽ப்டி பின்- உதவியாலே, கேசிங்க்-க்கு உள்ளே ரிப்பனை நுழையுங்க. இதே மாதிரி அடுத்த பக்கத்திலே, இன்னொரு ரிப்பனை நுழையுங்க. டிரெஸ்- னுடைய ரைட் சைட்-ஐ, வெளிப்பக்கம் கொண்டுவாங்க.ரிப்பனை இழுத்து, டிரெஸ் -லே, சுருக்கங்களை ஏற்படுத்துங்க.ரெண்டு பக்கத்திலேயும், ரிப்பன் முனையிலே, முடிச்சு போடுங்க.இப்படி அழகா, போ-மாதிரி பண்ணுங்க.கழுத்துக்கும், அக்குளுக்கும் இது ஸ்டார்ப்ஸ்-ஆ, இருக்கும். டிரெஸ்-லே, ப்ரூச்-ஐ, பின் பண்ணுங்க.

நீங்க அன்போட செய்த சின்ன ட்ரெஸ்- ரெடி.நீங்க செய்தது, பிடிச்சதா ?உங்க லிட்டில் கேர்ல்-க்கு அழகான புது டிரெஸ்- ஐ, போட்டு அழகுபடுத்த வேண்டிய நேரம் வந்தாச்சு. பல ரகமான பிரிண்டட் ஃபேப்ரிக்ஸ்,-லே இருந்தும், விதம் விதமான டெகரேடிவ் ப்ரூச்சஸ்- லே இருந்தும்,  சூஸ்- பண்ணி, உங்க குழந்தைக்கு பிடிக்கிற டிரெஸ்ஸஸ்-ஐ, நீங்க உருவாக்கலாம்.உண்மையிலே, இன்னும் ஒரு படி மேலே போய், நாங்க உங்களுக்கு சொல்லிக்கொடுத்த விஷயங்களை எல்லாம் பயன்படுத்தி,பல விதமான டிரெஸ்-ஐயும், நீங்க செய்து பாருங்க.அது உங்க சின்ன ராஜகுமாரியை தனியா எடுத்துக்காட்டும்.